# <u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>

## <u>அசல் வழக்கு எண்.305/2020</u>

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிவர்மன் | தந்தை பெயர் | : | குமாரவேல் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 21.04.2026

**D.W. : 1**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு இந்த வழக்கின் வாதியை எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 2018 – 2019 ஆண்டு காலகட்டத்தில் இருந்து பழக்கம்.

நாங்கள் வாதியிடம் கடன் வாங்கியிருந்தோம், ஆனால் அதை திருப்பி செலுத்திவிட்டோம். வாதியிடம் ரூ.6,00,000/- வாங்கியிருந்தோம். அதற்காக இந்த வழக்கில் குறிப்பிட்ட ஆவணங்களை வாதியிடம் ஒப்படைத்தோம் என சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். வாதியிடம் நாங்கள் பணத்தை திருப்பி செலுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அது தொடர்பாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வங்கி கணக்கு ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வங்கி கணக்கு மூலம் வாதிக்கு கடன் செலுத்தியதற்கான ஆவணம் இல்லை என்றால், நெல்சன் ஜெரால்டு மூலம் பணம் வாங்கியிருந்தோம் அதை அவர் மூலமாகவே வாதிக்கு திரும்ப செலுத்திவிட்டோம். இந்த விவரத்தை எனது முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் நாங்கள் கொடுத்த காசோலையை அவர் வசூலுக்கு கொடுத்த பிறகு தான் அவர் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் புகார் கொடுத்த பிறகு தான் கசோலை வசூலுக்கு போடப்பட்டது. நீதிமன்றத்தில் ஒரு Pendrive தாக்கல் செய்துள்ளேன். அந்த Pendrive-ல் என்ன விவரங்கள் உள்ளது என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். அந்த Pendrive-ல் என்னென்ன வாசகங்கள் உள்ளது என்பதற்கும் யார் யாரிடம் பேசியதாக சொல்வதற்கும் விவரங்களை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த மொபைல் எண்ணில் இருந்து எந்த மொபைல் எண்ணிற்கு பேசினேன் என்ற விவரத்தை முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி குரல் பதிவு யாருடையது என்பதை நிரூபிக்க எந்த நடவடிக்கையும்

எடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த Pendrive–ல் உள்ள விவரங்கள் போலியாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. அதனால் தான் எந்த மொபைல் எண் என்பது தொடர்பான விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் அது பதிவு செய்யப்பட்டது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நெல்சன் ஜெரால்டு என்பவர் எங்களிடம் வேலை செய்த ஓட்டுநர் ஆவார். அவர்மூலம் தான் கடன் வாங்கினோம். மேற்படி நெல்சன் ஜெரால்டு எங்களுக்கு வேண்டப்பட்ட நபர் என்றும், அவருக்கும் வாதிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவரை வைத்து போலி ஆவணம் தயார் செய்வதற்காக அவர் பெயரை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கும் வாதிக்கும் நடந்த கொடுக்கல் வாங்கலில் நெல்சன் ஜெரால்டுக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் தான் எதிர்வழக்குரையில் அவரைப் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் கடன் வாங்கியதற்கு கொடுத்த ஆவணங்களை திருப்பி கொடுத்ததாக சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. நான் எந்த ஆவணங்களையும் வாதியிடம் திருப்பி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதியிடம் வாங்கியிருந்த கடனை திரும்ப செலுத்தியிருந்தால் அப்போதே ஆவணங்களை திரும்ப பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. தாவாப்படி கடன் தொகை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் கடன் வாங்கும்போது வாதிக்கு கொடுத்த ஆவணங்களை மட்டும் அவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எங்களது வேறு எந்த ஆவணமும் வாதியிடம் இல்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.